Nurnberg, 1679

Wo Soll Ich Fliehen Hin
66.77.77



பாமாலை 291 நான் எங்கே ஓடுவேன்

1 நான் எங்கே ஓடுவேன்
மா பாதகனானேன்;
தீட்பெங்கும் என்னை மூடும்
ஆர் ஆதரிக்கக் கூடும்?
என் திகில் லோகத்தார்கள்
அனைவரும் நீக்கார்கள்

2 அன்புள்ள இயேசுவே
வா என்று சொன்னீரே
என் மனதும்மைப் பற்றும்
என் கிலேசமும் இக்கட்டும்
தனியா தயவாக
திடன் அளிப்பீராக

3 இப்போதும் உம்மையே
நான் சார்ந்தேன் இயேசுவே
துக்கித்தும்மண்டை வந்தேன்
உம்மால் மன்னிப்பைக் கண்டேன்;
நான் நரகத்தைக் காணேன்,
நான் ஜீவனுக்குள்ளானேன்